# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*********

முறையீட்டு மனு எண்.1338/2017/பேரூ 1
ஆணை நாள்: 21–12–2018.

திரு. என் சந்திரசேகரன்,
த/பெ திரு நஞ்சா கவுடர்,
கோடேரி ,
கோடேரி அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்–643213

-- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அதிகரெட்டி பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்

ஆணை.

நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேரூராட்சி, கோடேரி பகுதியினை சேர்ந்த திரு.என்.சந்திரசேகரன், என்பவரது நாளிடப்படாத முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2017ல் பெறப்பட்டது. முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண்.1338/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எண்.210/2017 நாள். 22.08.2017 ஐ செயல்படுத்தவில்லை எனவும், ஏற்கனவே இவ்வாணை பிறப்பிக்கப்படும் முன்னர் தெரிவித்த குற்றச்சாட்டுகளையே மீண்டும் தெரிவித்தும் விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.01.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 31.01.2018 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ ஆணை எண்.210/2017/22.08.2017நாளிட்ட ஆணையினை செயல்படுத்தும் விதமாக, அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் 05.10.2017 மற்றும் 05.12.2017 ஆகிய தேதிகளில் நோட்டீஸ் வழங்கப்பட்டதாகவும், திரு என். நந்தி என்பவர் காலதாமதம் ஏற்படுத்தும் எண்ணத்தில் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் மீண்டும் தகவல் கோரியதால் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இம்மனு மீது நடவடிக்கை எடுத்து அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 18.05.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி மேற்படி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 04.07.2018 அன்று ஆஜராகி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இந்நிலையில் மேற்படி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் பிறிதொரு வழக்கிற்காக 20.06.2018 அன்று விசாரணைக்கு ஆஜரானபோது இவ்வழக்கு குறித்த விவரம் கேட்கப்பட்டு இதற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 03.07.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி ஆணையினை செயல்படுத்தும் விதமாக குன்னூர் வட்டாட்சியருக்கு 03.04.2018ல் சம்பந்தப்பட்ட நிலத்தினை அளவை செய்து தருமாறு கடிதம் அனுப்பியதாகவும், ஆனால் இதுவரை மேற்படி நிலத்தினை அளவை செய்து தராத காரணத்தினால் இப்பொருள் மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை எனவும், ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எண்.210/2017/நாள்.22.08.2017ல் மேற்படி அதிகரெட்டி பேரூராட்சியில் முறைகேடான வரி விதிப்பு/பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி போன்றவை குறித்து கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக ஒரு குழுவினை அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், விரி விதிப்பு பெயர் மாற்றம், கட்டிட அனுமதி/வரிநிர்ணயம் ஆகியவற்றை இறுதி செய்யும்போது அடிப்படை ஆவணங்களை பரிசீலிக்காமலும், முழுமையான தல ஆய்வின்றியும், விதிகளுக்கு முரணாக பதிவு செய்யப்படாத மற்றும் சட்டபூர்வமாக செல்லத்தகாத ஆவணங்களின்பேரில் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் முறைகேடுகளுக்கு பொறுப்பான அலுவலர்கள்/பணியாளர்கள் மீது துறை வாரியான நடவடிக்கைக்கும் பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி ஆணைகளுக்குப் பின்னர், முறையீட்டு மனுதாரரிடமிருந்து வரப்பெற்றுள்ள முறையீட்டு மனுக்களின் நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி பொருட்கள் குறித்து உரிய தல ஆய்வு மேற்கொண்டு, துறைவாரியான நடவடிக்கைகளுக்காக தக்க பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி

வைக்குமாறும், அதன் நகலினை இம்முறைமன்ற நடுவத்திறகு அனுப்பி வைக்குமாறும் நீலகிரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்து 2014—ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4)(b) ன் கீழ் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் மனுதாரர் நீலகிரில மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை அணுகி தனது தரப்பிலானஆவணங்கள் மற்றும் விளக்கத்தினை சமர்ப்பிக்குமாறும் ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 —ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

—//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//—

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு என் சந்திரசேகரன்,
த/பெ திரு நஞ்சா கவுடர்,
கோடேரி,
கோடேரி அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்—643213

2.செயல் அலுவலர்,
அதிகரெட்டி பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம்.

3பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நீலகிரி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
உதகமண்டலம்.